ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1776/16 - 2012 සැප්තැම්බර් මස 19 වැනි බදාදා - 2012.09.19

*1776/16 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.- 277/40.*

**(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டம்**

*(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவுடன் சேரத்து வாசிக்கப்படுவதாகிய 47 ஆம் பிரிவின் கீழ் தேசிய மரபுரிமை அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கலாநிதி ஜெகத் பாலசூரிய,
தேசிய மரபுரிமை அமைச்சர்.

கொழும்பு,
2012, ஓகத்து 23.

ஒழுங்குவிதிகள்

2012, யூன் 22 ஆந் திகதிய 1763/25 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட புராதனப் பொருட்கள் வெகுமதி நிதிய ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) அந்த ஒழுங்குவிதிகளின் 1 ஆம் ஒழுங்குவிதியை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம்:-

"1. இந்த ஒழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, புராதனப் பொருட்கள் வெகுமதி நிதிய ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.";

(2) அட்டவணை 1 இன் விடயம் (i) என்பதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| | | |
|---|---|---|
| "(i) | பொலிஸ் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் அல்லது புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் புராதனப் பொருளின் ஏற்றுமதியைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ள இலங்கை சுங்கத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு அரசாங்க நிறுவனங்களின் அலுவலர்கள். | 30 %" |

10- 232